THE HON. SRI A. B. SHETTY :—" The original question related to the number of leprosy patients who were given injections. I do not understand the relevancy of the supplementary question now put by the hon. Member."

DEPUTY SPEAKER :—" Questions are over."

SRI K. MADHAVAN NAMBIAR :—" On a point of order, Sir. The question No. 2083 put by the hon. Member, Sri Krishna Ayyar, is a very important one. Please allow a half-hour debate on it."

DEPUTY SPEAKER :—" It is not a point of order."

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—ANNOUNCEMENT BY THE DEPUTY SPEAKER *RE* MESSAGE FROM THE GOVERNOR.

DEPUTY SPEAKER :—" I have to announce to the House the following message, dated 2nd August 1955, received from the Governor of Madras :—

' In pursuance of article 207, clause (1) read with article 199, clause (1) sub-clause (*a*) of the Constitution of India, I, Sri Prakasa, Governor of Madras, hereby give my recommendaticn to the introduction of the Madras Legislative Assembly of the Madras General Sales Tax (Third Amendment) Bill, 1955.'

" The next item on the Agenda is a statement under rule 40. Let the hon. Deputy Leader of the Opposition, Sri Kalyanasundaram move it."

III.—STATEMENT UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE* SITUATION OF HANDLOOM INDUSTRY IN KARUR.

9-35 a.m. * SRI M. KALYANASUNDARAM :—" கனம் உதவி சபா நாயகர் அவர்களே, திருச்சி ஜில்லாவில் கரூர் நகரமும், அதன் சுற்றுப்புறமும் கைத்தறிக்கு மிகவும் முக்கியமான இடம். அங்கு சுமார் 6,000 கைத்தறித் தொழிலாளிகள் இருக்கிறார்கள். ஆனால், அங்கு கைத் தறித் தொழில்கள் எல்லாம் தொழிற்சாலை அடிப்படையில் அமைந்துள் ளன. விசை யந்திரங்களை உபயோகப்படுத்தாத தொழிற்சாலைகளிலும் 20 தொழிலாளிகளுக்கு மேல் வேலை செய்தால் தொழிற்சாலை சட்டம் அமுல் நடத்தப்படும் என்று சட்டம் திருத்தப்பட்டவுடன் அங்கு இருக்கக் கூடிய முதலாளிகள் அச் சட்டத்தின் அம்சங்களை அமுல் நடத்தத் தவறி வந்தார்கள். கைத்தறிக்கு இருக்கக்கூடிய நெருக்கடியை உத்தேசித்து சர்க்கார் அவர்களுக்கு அவகாசம் கொடுத்து வந்தார்கள். தொழிலாளி களும் இதுவரையில் அதைப்பற்றி வற்புறுத்தாமல் இருந்து வந்தார்கள். அங்கு உற்பத்தியாகிறவை படுக்கை விரிப்புகள், துண்டுகள்தான். இவை மிகவும் லாபகரமாகவே இருந்து வருகின்றன. இந்தத் தொழிலாளிகள் அதிகச் செலவில்லாத சில உரிமைகளையாவது கொடுக்க வேண்டும் என்று கேட்டதற்காக அந்த முதலாளிகள் தொழிற்சாலைகளை மூட ஆரம்பித்து வருகிறார்கள். அதற்கு முதன் முதலில் வழி காட்டியாக **K.N.S.P.R. Factory** என்ற தொழிற்சாலையிலிருந்து 150 தொழிலாளிகளை, படிப்படியாக 23 பேராகக் குறைத்து, அதையும் மூட பிரயத்தனம் செய்தார்கள். அப்பொழுது தொழிலாளிகள் ஒன்று சேர்ந்து அதை மூடக் கூடாது என்று கிளர்ச்சி செய்தார்கள். தொழிற் சங்கத் தலைவர்—எல்லா மக்களுடைய அன்பக்குப் பாத்திரமானஒருவர் உண்ணுவிரதம்